# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு ஜீலை 27ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 4.50 மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரணக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திரு.சு.இராமமூர்த்தி அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1) கரூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3) துறை நாள்.30.04.1997ல்நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

| வ.எண் | | விபரம் | 2021–2022 |
|---|---|---|---|
| 1 | 1 | தற்போதைய மக்கள் தொகை | 241988 |
| | 2 | நகரின் பரப்பளவு (சதுர கிமீ) | 53.26 |
| | | வரிவிதிப்புகள் | |
| | 3 | குடியிருப்புகள் | 67428 |
| | 4 | வணிக நிறுவனங்கள் | 9466 |
| | 5 | தொழிற்சாலைகள் | 385 |
| | | மொத்த வரிவிதிப்புகள் | 72995 |
| | 6 | சாலைகளின் நீளம் | 328.841 கிமீ |
| | 7 | வடிகால்களின் நீளம் | 337.46கிமீ |
| | 8 | பேருந்து நிலையம் | 1 |
| | 9 | பொது கழிப்பிடங்கள் | 10 |
| | 10 | சமுதாய கழிப்பிடங்கள் | 48 |
| | | வாகன விபரங்கள் | |
| | 11 | டம்பர் பிளேசர் | – |
| | 12 | டிப்பர் லாரி | 8 |
| | 13 | காம்பேக்டர் | 2 |
| | 14 | டம்பர் பிளேசர் பின் | – |
| | 15 | காம்பேக்டர் பின் | – |
| | 16 | தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளின் அளவு | 71 மெட்ரிக் டன் |
| 2 | | தேவைப்படும் பணியாளர்கள் | |
| | 1 | துப்புரவு பணிக்கு | (72995/250×3) 876 |
| | 2 | லாரிகளுக்கு | (8×4) 32 |
| | 3 | டம்பர் பிளேசர் (6 × 1) | – |
| | 4 | காம்பாக்டர் (2 × 5) | 10 |
| | 5 | கலவை உரக்கிடங்கு | 8 |

| | | | |
|---|---|---|---|
| | 6 | நகராட்சி வணிக வளாகங்கள் (8 × 2) | 16 |
| | 7 | பேருந்து நிலைய கழிவறைகள் (2 × 2) | 4 |
| | 8 | பேருந்து நிலையம் ஏ கிரேடு | 4 |
| | 9 | நுண் உயிர் உரம் செயலாக்க மையம் (MCC) (6× 6) | (12×6) 72 |
| | | **தேவைப்படும் மொத்த பணியாளர்கள்** | **1022** |
| 3 | | தற்போது பணியில் உள்ள நிரந்தர பணியாளர்கள் | 220 |
| | 1 | தனியார் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் ( Out Sourcing) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis/6093/P3/ 2018 Dt.,07.04.2018 | 190 |
| | 2 | தனியார் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் (Out Sourcing) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis/22098/P3/ 2016 Dt.,31.08.2016 | 213 |
| | 3 | தனியார் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் (Out Sourcing) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis/28369/J3/ 2019 Dt.,04.12.2018 | 220 |
| | | தற்போதுள்ள மொத்தம் பணியாளர்கள் | **843** |
| | | நிகரம் தேவைப்படும் பணியாளர்கள் | **179** |

இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை அகற்ற வரிசை எண்.3 (1)ல் கண்டுள்ள 190 துப்புரவு பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.K.Dis/6093/P3/2018 Dt.,07.04.2018-ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி நாள்.28.08.2018–ல் அனுமதி பெறப்பட்டு 30.08.2018–ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு நகர்மன்ற தீர்மான எண்.2470, நாள்.23.09.2021–ல் அனுமதிக்கப்பட்ட பணியானது தற்பொழுதுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சூழ்நிலையில் 30.09.2021–ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

வரிசை எண்.3 (3)ல் கண்டுள்ள 213 துப்புரவு பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். K.Dis/22098/P3/2016 Dt.31.08.2016–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.16 நாள்.29.12.2016ல் அனுமதி பெறப்பட்டு31.03.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு நகர்மன்ற தீர்மான எண்.200, நாள்.26.02.2021–ன்படி அனுமதிக்கப்பட்ட பணியானது தற்பொழுதுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சூழ்நிலையில் 31.03.2022–ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

வரிசை எண்.3 (2)ல் கண்டுள்ள 220 துப்புரவு பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். K.Dis/28369/J3/2019 Dt.,04.12.2018–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Blackcat Solution, சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.1987 நாள்.06.01.2020–ல் அனுமதி பெறப்பட்டு04.02.2020–ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு நகர்மன்ற தீர்மான எண்.02, நாள்.06.01.2021–ன்படி அனுமதிக்கப்பட்ட பணியானது தற்பொழுதுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சூழ்நிலையில் 31.01.2022–ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் 2021—2022—ஆம் நிதி ஆண்டிற்கு குடியிருப்புகளின் அடிப்படையில் 1022 தூய்மை பணியாளர்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தேவையாக உள்ளதால். இதில் 220 நிரந்தர தூய்மை பணியாளர்கள் போக மீதி 802 தூய்மை பணியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணிகள் மேற்கொள்ளும் வகையில் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள உரிய அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1853/2020/எச்1)

தீர்மானம் எண். 294 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சியில் உள்ள ஒரு முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்தை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் மூ.மு.எண். 12949/2017/டிபி1 நாள்.13.6.2018—ல் 01.10.2009 முதல் 30.09.2017 வரை நீடித்த வைத்துக் கொண்டதற்கு பின்னேற்பு வழங்கியும் மற்றும் 01.10.2017 முதல் 30.09.2018 வரை மேற்படி முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்தினை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும் 01.10.2018 முதல் 30.09.2019 வரை ஓராண்டு காலம் நீடித்து வைத்துக் கொள்ளவும் அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

தற்போது உள்ள நிலையில் முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்தை 01.10.2019 முதல் 30.09.2020 வரையிலும் மற்றும் 01.10.2020 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.சி1/2942/2009 நாள்.20.08.2020ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரி கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே 30.09.2021ம் தேதியுடன் முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்திற்கான நீட்டிப்பு காலம் முடிவடைவதால், இப்பணியிடத்தின் அவசியம் கருதி இந்நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம்கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்டு தற்பொழுது 53.26 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் கரூர் நகராட்சி விரிவாக்கம் பெற்று செயல்பட்டு வருவதாலும், நகரமைப்பு திட்டங்கள் மற்றும் வரன்முறைப்படுத்தும் திட்டங்களை கண்காணித்து அனுமதி வழங்கும் பொருட்டு இந்நகராட்சிக்கு நிரந்தர முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடம் அவசியமாக தேவை என்பதால் முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்தினை 01.10.2021 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம். (சி1/2942/2009)

தீர்மானம் எண். 295 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கும் தெருக்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்கள் மற்றும் பொதுகழிப்பிடங்களில் கிருமி நாசினி தெளிக்க பயன்படுத்தும் விசை தெளிப்பான்கள் அனைத்தும் கடந்த ஓராண்டிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வந்தநிலையில் அனைத்து விசை தெளிப்பான்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. தற்போது கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை வேகமாக பரவி வரும் சூழ்நிலையில் நகர்புற பகுதியில் தினசரி அனைத்து இடங்களிலும் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும் கொரோனா தொற்று பரவாமல் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலையினை கருதியும் இலகுரக வாகனத்தில் பொருத்தி இயங்கக் கூடிய விசைத்

தெளிப்பான்கள் 10 எண்ணம் Spraying Hose 20No மற்றும் Spraying Gun 50No வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் அவர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார், பொதுமக்களின் பொதுசுகாதார அத்தியாவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு–15ன் ரூ.5.00லட்சத்தில் விசை தெளிப்பான்கள் 10 எண்ணிக்கை Spraying Hose 20No மற்றும் Spraying Gun 50No கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் விசை தெளிப்பான்கள் 10 எண்ணிக்கை Spraying Hose 20No மற்றும் Spraying Gun 50No கொள்முதல் செய்ய 10.05.2021–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| Sl.NO | Name of the Company | Sprayer Machine (Rs.per No) | Spraying Hose (Rs.per No) | Spraying Gun (Rs.per No) |
|---|---|---|---|---|
| 1 | Sri.Kaliyamman Trading Corporation, Namakkal | 40880 | 2242 | 885 |
| 2 | Sri. Athanur Traders, Namakkal | 42000 | 2300 | 900 |
| 3 | Sri Akshaya Traders, Trichy | 42500 | 2500 | 950 |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கு ஏற்ப இருப்பதால் பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான விசை தெளிப்பான்கள் 10 எண்ணிக்கை Spraying Hose 20No மற்றும் Spraying Gun 50No கொள்முதல் செய்ய குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி கிருமி நாசினி விசை தெளிப்பான்கள் கொள்முதல் செய்வதற்கு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய காலஅவகாசம் இல்லாத காரணத்தினாலும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பொது சுகாதார பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி விசை தெளிப்பான்கள் 10எண்ணிக்கை Spraying Hose 20No மற்றும் Spraying Gun 50No கொள்முதல் செய்ததற்கான செலவினத் தொகை ரூ.4,97,890/–ஐ தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பொதுநிதி அல்லது மாநில பேரிடர் மேலாண்மை திட்ட நிதியின் (SDRF) கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம். (எச்1/5350/2021)

தீர்மானம் எண். 296 பதிவு செய்யப்பட்டது.

4)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க ஒரே தெருவில் 3 கொரோனா தொற்று நோயாளிகள் இருக்கும் இடங்களில் Containment zone அமைக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக 3 கொரோனா தொற்று நோயாளிகள் இருக்கும் இடங்களை கண்டறிந்து அப்பகுதியினை கொரோனாவால் பாதிக்கப்பட்ட பகுதியாக Containment zone அறிவித்து அப்பகுதியில் பொதுமக்கள் செல்லாதவகையில் இரும்பு தகடுகள் கொண்டு தடுப்பு அமைக்க 650 (GI) தகர ஷீட்டுகள் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்டவிதி 1920 பிரிவு–15ன்கீழ் ரூ.13.50லட்சத்தில் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட பகுதியாக Containment zone அறிவித்து அப்பகுதியில் பொதுமக்கள் செல்லாதவகையில் தடுப்பு அமைக்க 650 (GI) தகர ஷீட்டுகள் கொள்முதல் செய்யும் பணிக்கு 20.05.2021ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| வ. | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | (GI) தகர ஷீட்டு |
|---|---|---|---|

| எண். | | | ஜி.எஸ்.டிஉட்பட |
|---|---|---|---|
| 1) | RPS. Constrction,<br>51, Ranimangamal Street, Karur. | 1 | ரூ.1848 |
| 2) | SASTHA Engineering Works,<br>3/28, KM Puthur, Velliyani-Post,<br>Karur | 1 | ரூ.1880 |
| 3) | Sri Krishna Traders<br>218/115, VaiyapuriNagar,II Cross,<br>Karur | 1 | ரூ.1900 |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள RPS .Constrction, Karur நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலைவிபரத்திற்கு ஏற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகோரி பணியினை மேற்கொள்ள போதியகால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான செலவினத் தொகை ரூ.1345344/– யை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் நிதியின் (SDRF)கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம். (5421/2021/எச்1)

தீர்மானம் எண். 297 பதிவு செய்யப்பட்டது.

5)தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்கள் 2021, தேர்தல் தேதியன்று 26.02.2021 அன்று அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து கரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதன்படி கரூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் அனைத்து சுவர் விளம்பரங்கள் மற்றும் சின்னங்கள் 48 மணி நேரத்திற்குள் அழிக்கபட வேண்டியுள்ளதால் இதற்கு தேவையான சுண்ணாம்புதூள், காவி பவுடர், வெள்ளை அடிக்கும் பிரஸ் மற்றும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு, தேர்தல் பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டவிதி 1920 பிரிவு–15ன் கீழ் மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 லட்சத்திற்குஅனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண். | தேவையானபொருட்களின் விவரம் | தேவையாளஅளவு |
|---|---|---|
| 1) | Decorative wall washing powder | 3180 kg |
| 2) | ManjaKaavi | 341Nos |
| 3) | Brush Premium | 84Nos |
| 4) | Plastic Bucket 16 Lit | 62Nos |
| 5) | Wall gerapper 75mm 3” | 22 Nos |
| 6) | Cutting Player 8” | 3 Nos |
| 7) | Hacksaw Blade 1” | 6 Nos |

மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்ய 26.02.2021–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணம் | வாங்காலாம்மன் எலக்ட்ரிகல்ஸ், 138,மெயின் ரோடு, தாந்தோணிமலை, கரூர்–5 | ராஜ் &கோ 138/1 மெயின்ரோடு, தாந்தோணிமலை, கரூர்–5 | சோழாஎலக்கட்ரிகல்ஸ் 37, திருச்சி மெயின்ரோடு, புலியூர், கரூர்–114 |
|---|---|---|---|---|---|
| 1) | Meka White Cem decorative wall washing powder | 1 Kg | 19.644 | 20.5 | 21 |
| 2) | ManjaKaavi | 1 Kg | 141.7 | 142 | 143 |
| 3) | ATCAS Brush Premium | 1 No | 223.68 | 224.5 | 225.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4) | Plastic Bucket ganga 16 Lit | 1 No | 177 | 179 | 181 |
| 5) | Devata wall gerapper 75mm 3” | 1 No | 77 | 78 | 79 |
| 6) | Cutting Player 8” Taparia | 1 No | 349 | 352 | 353 |
| 7) | Hacksaw Blade 1” | 1 No | 15 | 16 | 17 |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வாங்காலம்மன் எலக்ட்ரிகல்ஸ், 138,மெயின்ரோடு, தாந்தோணிமலை, கரூர்–5 நிறுவனத்தின் விலைவிபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கு ஏற்ப இருப்பதால் தேர்தல் பணிக்கு தேவையான சுண்ணாம்புதூள், காவிபவுடர், வெள்ளை அடிக்கும் பிரஸ் மற்றும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்ய குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி சுண்ணாம்புதூள், காவிபவுடர், வெள்ளை அடிக்கும் பிரஸ் மற்றும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு, ஒப்பந்தப்புள்ளிகள் கோர தேர்தல் நன்நடத்தைவிதிகள் அமலில் உள்ள காரணத்தினாலும் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. எனவே, தேர்தல் பணி அவசர அவசியம் கருத்தில் கொண்டு தேர்தல் பணிக்கு தேவையான சுண்ணாம்பு தூள், காவி பவுடர், வெள்ளை அடிக்கும் பிரஸ் மற்றும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்து அதற்கான செலவினத் தொகை ரூ.143382.30/– ஐ தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பொதுநிதியின் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>
மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம். (3489/2021/எச்1)

தீர்மானம் எண். 298 பதிவு செய்யப்பட்டது.

6)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண்.TN47AH8815 வாகனத்திற்கு பழுதுகள் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆணையர் மற்றும் தனிஅலுவலரின் 15.04.2021 அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் வாகனத் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையான Eicher Jailaxmi. Auto & Work Agencies Pvt. Ltd, Karur என்ற நிறுவனத்திடம் நேரடியாக விலைப்புள்ளி பெற்று பொதுசுகாதார அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கான செலவினத் தொகை ரூ.28550/–ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு.</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (6229/2019/எச்5)

தீர்மானம் எண். 299 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சி பொறியாளர் நிலை–II பணியிடம் 01.10.2013 முதல் 30.9.2014 முடிய நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி பொறியாளர் நிலை–II பணியிடம் 1987ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இருந்து வருகிறது. அரசு ஆணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.14.01.2011–ன்படி கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன், கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய பெருநகரமாகும். பல்வேறு தொழிற்சாலைகள் அமைந்துள்ள இந்நகரம் 53.26 ச.கி மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. இந்நகருக்கு தினசரி வெளியூரிலிருந்து வியாபார நிமித்தம் ஒரு லட்சத்திற்கு மேல் பொதுமக்கள் வந்து செல்கின்றனர். மேலும் வளர்ந்து வரும் இந்நகராட்சிக்கு அடிப்படை வசதி மற்றும் அபிவிருத்தித் திட்டப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள், பாதாள சாக்கடைப் பணிகள், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள், போக்குவரத்து மேலாண்மை திட்டப் பணிகள் ஆகிய

பணிகளை கண்காணிக்கும் பொருட்டு நகராட்சிப் பொறியாளர் நிலை–II பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2014 முதல் 30.9.2021 வரை நீடித்து வைத்துக் கொள்ளக் கோரும் கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி நகராட்சிப் பொறியாளர் நிலை– II பணியிடம் அவசியம் தேவை என்பதால் மேலும் 01.10.2021 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2365/2007)

தீர்மானம் எண். 300 அனுமதிக்கப்பட்டது.

8) கரூர் நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்காக தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் 01.10.2013 முதல் 30.9.2014 முடிய நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி தெரு விளக்குகள் பராமரிப்பு பணிக்காக தோற்றுவிக்கப்பட்ட மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் 33 வருடங்கள் தொடர்ந்து இருந்து வருகிறது. அரசு ஆணை எண்.19, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை நாள். 14.01.2011–ன்படி கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன் கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய நகரமாகும் என்பதால், மேற்படி வார்டுகளில் தெருவிளக்கு அதிக அளவில் பராமரிக்க வேண்டியுள்ளதாலும், ஒரு மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் அவசியம் தேவைப்படுவதால், 01.10.2014 முதல் 30.9.2021 வரை நீடித்து வைத்துக் கொள்ள கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி ஒரு மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் அவசியம் தேவை என்பதால், மேலும் 01.10.2021 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2366/2007)

தீர்மானம் எண். 301 அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விஸ்தரிப்பு திட்டத்திற்காக 10 (பத்து) தொழில்நுட்பப் பணியிடங்கள் 01.10.2013 முதல் 30.09.2014 முடிய நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6568/2009/எப்3, நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கீழ்க்கண்டுள்ள–10(பத்து) தொழில்நுட்பப் பணியிடங்கள்

| வ.எண். | பணியிடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மின்பணியாளர் நிலை– I | 3 |
| 2. | மின் பணியாளர் நிலை– II | 3 |
| 3. | குழாய் ஆய்வர் | 1 |
| 4. | குழாய் பொருத்துனர் நிலை–I | 1 |
| 5. | குழாய் பொருத்துனர் நிலை–II | 2 |
| | மொத்தம் | 10 |

மேற்படி பணியிடங்கள் 30 ஆண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகிறது. தற்போது கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம்கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல்

செயல்பட்டு வருவதுடன் கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடங்கிய பெருநகரமாகும். தற்போது குடிநீர் விநியோகப் பணிக்காக ஆறு தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீரை நகருக்கு விநியோகம் செய்யவும், புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கவும், மேற்படி 10 (பத்து) தொழில்நுட்பப் பணியிடங்கள் அவசியம் தேவைப்படுவதால், 01.10.2014 முதல் 30.9.2021 முடிய நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி மேற்படி பத்து தொழில்நுட்ப பணியிடங்கள் அவசியம் தேவை என்பதால் மேலும் 01.10.2021 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2367/2007)

தீர்மானம் எண். 302 அனுமதிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள தொழில்நுட்பமில்லாத 16 (பதினாறு) பணியிடங்களை 01.10.2013 முதல் 30.9.2014 முடிய நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கீழ்க்கண்டுள்ள தொழில்நுட்பமில்லாத 16 (பதினாறு) பணியிடங்கள் குடிநீர் விநியோகம் மற்றும் விஸ்தரிப்புத் திட்டத்தினை செயல்படுத்த பணியிடங்களான

| வ.எண். | பணியிடங்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ரிசர்வயர் காவலர் | 3 |
| 2. | தலைமை நீரேற்று நிலைய கிளீனர் | 3 |
| 3. | தலைமை நீரேற்று நிலைய காவலர் | 2 |
| 4. | பி.எப்.கிளீனர் | 5 |
| 5. | மறை திறப்பாளர் | 3 |
| | **மொத்தம்** | **16** |

மேற்படி பணியிடங்கள் இந்நகராட்சியில் தொடர்ந்து இருந்து வருகிறது. தற்போது கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி ,இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன், கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய பெருநகரமாகும். குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் விஸ்தரிப்பு திட்டத்திற்கு மேற்படி பணியிடங்கள் தொடர்ந்து அவசியம் தேவைப்படுவதால், 01.10.2014 முதல் 30.9.2021 முடிய நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி இந்நகராட்சிக்கு தொழில்நுட்பமில்லாத–16 (பதினாறு) பணியிடங்கள் அவசியம் தேவை என்பதால், மேலும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2368/2007)

தீர்மானம் எண். 303 அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு.36 பகுதியில் உள்ள வாங்கலம்மன் நகரில் தற்போது ஏற்கனவே உள்ள 3 மின்கம்பத்தில் ஒரு தெருவிளக்கு மட்டும் எரிந்து கொண்டு வருகிறது. தற்போது மேலும் உள்ள இரணடு மின்கம்பங்கள் உள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் பொருத்தப்பட்ட நிலையில் இருப்பதால் இரவு நேரங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சிரமமாக இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்ததற்கிணங்க, மின்கம்பம் 36/126–க்கு மட்டும் மின்பாதை அமைத்து கொடுக்குமாறு மின் வாரியத்திற்கு இவ்வலுலக கடிதம் எண்.இ3/5200/2021 நாள்.24.06.2021ன்மூலம் விண்ணப்பித்தமைக்கு மின்சார வாரியத்திடம் இருந்து வரப் பெற்ற மதிப்பீட்டு பட்டியல் நாள்.30.06.2021 தொகை ரூ.1975/– ஐ மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி இடத்திற்கு புதிய தெருவிளக்கு அமைக்க மின்பாதை அமைக்க மின்சார வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.1975—ஐ செலுத்த மன்ற அனுமதி வழங்கலாம். (இ3/5200/2021)

தீர்மானம் எண். 304 அனுமதிக்கப்பட்டது.

12)கரூர் நகராட்சியில் கல்வி நிதி, பொதுநிதிகள் மற்றும் குடிநீர் பணியினை மேற்கொள்ளுதலின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 30.06.2021 ம் தேதி அன்று தஞ்சை மாலைமுரசு பிரைவேட் லிமிடெட், திருச்சி மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.5906/—ஐ தஞ்சை முரசு பிரைவேட் லிமிடெட், திருச்சி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.5906 /— பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1243/2021)

தீர்மானம் எண். 305 அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சியில் 2021— 2022 ஆம் ஆண்டில் பொதுநிதி பணிகள் மற்றும் குடிநீர் பணியினை மேற்கொள்ளுதலின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 25.06.2021 ம் தேதி அன்று Makkal Kural நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.4738/— ஐ Makkal Kural, நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.4738/—ஐ வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/6376/2021)

தீர்மானம் எண். 306 அனுமதிக்கப்பட்டது.

14)கரூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020—2021ஆம் ஆண்டின்கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட 3 பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 14.02.2021ம் தேதி அன்று Thina Bhoomi நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.9476/—ஐ Thina Bhoomi நாளிதழ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.9476/— வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/945/2020)

தீர்மானம் எண். 307 அனுமதிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சிக்கு சொந்தமான பாலம்மாள்புரம் கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள 150எச்.பி., மோட்டாரின் Auto Transformer Starter (ATS) காயில் எரிந்துவிட்டது. யூனிட்—1 மோட்டாரில் ATS Hamming sound வருவதால் காயில் பழுதடைய வாய்ப்புள்ளது. எனவே, கழிவுநீர் அகற்றும் Auto Transformer Starter (ATS) களை பழுதுநீக்கும் வகையிலும் Air Cooled Auto Transformer புதிதாக வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15கீழ் நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொண்டு முடிக்கப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.2,98,456/—யை வழங்க நகர்மன்ற தீர்மான எண்.62 நாள்.31.05.2021ல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணியானது நகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியிருப்பதால்

மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.2,98,456/—யை நகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள மேற்கொண்ட செலவினத் தொகை ரூ.2,98,456/—யை நகராட்சி புதைவடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/4516/2020)

தீர்மானம் எண். 308 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி